668

வேலுமயிலுந் துணை.

தோத்திரக் கீர்த்தனை.

இரண்டாம் பாகம்.



8 - MAY 1924

இஃது

பழநி பண்டிதகார வீரபத்திரத் தேவர் குமாரன்

திருமூர்த்தியால்

இயற்றப்பட்டது

ராதாகிருஷ்ண விலாசம் பிரசில் பதிப்பிக்கப்பட்டது.

[விலை] 1924. [அணை 2

Q26:4V
N24·2
18095

உ

வேலுடையிலுந்துணை.

காப்பு விருத்தம்.

பாருகிலே சிறந்த பழனிச் சிவகிரியிலுறை
ஆறுமுகமான திரு ஐயன் முருகையன்மேல்
சிருநிறை செந்தமிழாற் சிறந்த தோத்திரம்பாட
ஆறுமுகமான திரு அருகமர் கணபதி தாள்காப்பே.

சரஸ்வதி துதி.

விருத்தம்.

கலைகளுக்காதார தேவியே யுன்பாதங்
கருத்தினிலிருத்தியுந்தன்
விலைமதிக்காஞான விற்பன விவேகமுடன்
வித்யாவரத்தைவேண்டி
உலைபட்டமெழுகுபோலுருகின்ற சிந்தையாய்
உந்தனைத் துதித்தேனம்மா
தலையிட்டு நின்னருள் தந்தெனது தோத்திரம்
தடையறக் காப்பாய்நீயே.

அம்பாள் துதி.

(கனிந்துவந்தேமாதர என்ற மெட்டு)

பல்லவி.

அருட்கண்வைத்தே ஆதரி	நீதிரி
அம்பாள் ஈஸ்பரி	தாயி
அங்காளம்மீஸ்	பரியே
எஞ்ஞான்றுங்	காரு
அங்காளம்மீஸ்	பரியே (அ)

அநுபல்லவி.

உந்தனின் மைந்தன்	னந்தனைவந்தான்
அம்பாளீஸ்பரி	தா
அங்காளம்மீஸ்	மீய
எஞ்ஞான்றுங்	காரு
அங்காளம்மீஸ்	பரியே (அ)

181695

வந்தருள் தருவாய் சுந்தரி குருவாய்
அம்பாளீஸ்பரி தாயி
அங்காளம்மீஸ் பரியே
எஞ்ஞான்றுங் காரு
அங்காளம்மீள் பரியே (அ)

அடியனின் துயரதை கொடியினில் மிடிதீர்
அம்பாளீஸ்பரி தாயி
அங்காளம்மீஸ் பரியே
எஞ்ஞான்றுங் காரு
அங்காவம்மீஸ் பரியே (அ)

(தொஹைரு.)

அண்ட சராசரங்களனைத்துச்சும் நியே தாயாய்
அன்போடே யாதரிக்கும் அன்னுய் கேளாய்
சண்டனைச் செயித்து சதாசிவமாயிருக்க.
தொண்டன் எனைக் காத்தருளே தருவாய்

சரணம்.

சத்சிவகாமி சத்துவகேமி சுத்தபரிபூரணி சுகவாரி
இத்தருணந்தனிலுந்தனைப்பேணி பக்தன்திருமூர்த்திபணி
(சூலபாணி

பக்தியருள்வாய் பூரணி
புண்ய காரணி (அ)

(சென்னைக்கிலாபத்தின் என்ற மெட்டு.)

பல்லவி.

கந்தவேளைப் பணிந் தோர்கள்
கடைத்தேர் வார்கள்

அனுபல்லவி.

அடுக்குச்சந்தம்.

கங்கைமைந்தனுகிய கரிமுகனுக்கினைய (கந்த)

அம்ராபதியைக் கார்த்த அண்டரினிடர்தீர்த்த
அரவாபரணன்மகன் ஐயன் முருகையனே (கந்த)

மந்தமதியேபோகும் வந்தவினையேபோகும்
எந்தநேரத்திலுஞ்சித் தந்தனிலைவசிப்பார் (கந்த)

பொய்கை முனிக்குகற் கதிபெறவருளிய
பதியின் திருப்பாதமித் கதியிலே நாமும் (கந்த)

சித்திபெருவோர் நிதம் பத்தியாய்ப் பணிவர்தம்
புத்திதிருமூர்த்திசொல் சத்தியவாக்கியபதம் (கந்த)

ஆர்செய்த மோசமிது என்ற ராமாயண தரு மெட்டு.

பல்லவி.

ஆதமுக வேலா எனை
ஆதரித்தருள் சிலா (ஆறு)

அனுபல்லவி.

திருவாவினன்குடி யமர்ந்திடுமெ வேலா
தினமுமுன் திருவடி பணிகிறேன் சிலா
தருளாய் எனக்குநல்ல வாமதுமேலாய்
தருணமிதுவே எனைத் தயவுடன் ஆளாய் (ஆறு)

சரணம்.

எந்தன் மனக்கவலை நீயறிவாயே
வந்தேயருள்புரிந் தாதரிப்பாயே
உந்தன்திருவிளை யாடலால் நீயே
சந்தோஷமாயினை பேரளிப்பாயே (ஆறு)

மலையாசனப்புதல்வி மகனேவாராய்
மருளதனோக்கி அருள்ஒளிதாராய்
கலிகள்பலவுமிகக் கற்றிடச் சீராய்
கயவரெனைக்கண்டஞ்சிக் கலங்கிடப்பாராய் (ஆறு)

அண்டரமரர்தாழும் அற்புதவீசா
அடியேன் செபிநேயதை அகற்றுவாய்லேசாய்

பண்டித திருமூர்த்தி பகர்வதைக்கேளாய்
பார்ப்பவரதிசயிக்க பாலனையாளாய் (ஆறு)

ராஜகோபாலபெர்சித்தி என்ற வமட்டு.

பல்லவி.

நாதனே நீவடிவேலவா——நல்லருள்தாரவா (நாத)

நானே உந்தனை மிக
நாடிவந்தேதய னேக
தோஷநிவர்த்திக் காகத்
தோத்தரித்தேதன் வருக (நாத)
பாதகரெனைக் கண் டஞ்ச
பயிராபகாரமும் மிஞ்ச
தயவுவைத்திருந்தேதன் சஞ்ச
லமதுனைக்கண்டே துஞ்ச (நாத)
எப்பவும் சவுக்கிய மாய்
மூப்பொழுதும் முக்கியமாய்
அப்பனெ உந்தன் மய மாய்
அனைத்தும் சுப ஜெய மாய் (நாத)
தீராத வியாதி தீர்க்க
ஈராருவிழியால் பாக்க
சேராதாருறவு போக்க
திருமூர்த்தியைக் கார்க்க (நாத)

பாப்பு விபனச்சந்திரபாலன் என்ற மெட்டு.

மாயோன்மருகக்குக நாதா
மாமகிமைபெற்ற நீதா (மாயோன்

அனுபல்லவி.

நாயேனுனை நம்பி மிக
வாயாரத்துதிசெய் தாக
நீயேவந்தெனையே காக்க
சேயேபிறந்தீக வளர்க்க (மாயோன்)

தோஹரு.

வாழையடி வாழையாய் வரவே என் மரபுநல்
வத்சலனைக் கொடுத்தருளுவாய்
ஏழையடியேனுன்றன் திருவடியே கதியேயென்
றெந்தையே போற்றிசெய்தேன்.

அனுபல்லவி எடுப்பு.

கோரும் வீ	திருமூர்த்தி
தேரும்படியே	சித்தி
தாருமென	தகத்தி
ஓரும்பரம	சுத்தி (மாயோன்)

ஒத்துழையா வீரன் என்ற மெட்டு.

பல்லவி.

நித்தியனே	ஈசா
சித்தியருட் பிர	காசா (நித்)

அனுபல்லவி.

ஈசனே பக்தர் வாசனே (நித்)

சரணம்.

சுத்த பரி		பூரணமாய்
சுயம்மநீ		காரணமாய்
சுபமாக	ஜெபமாக	தபமாகவே (நித்)
உத்தமனே		உற்றதுணை
உன்னையல்லா		லேதுபிணை
உருவான	அருவான	குருவானவா (நித்)
தேவமோசனி		பதி வள்ளி
தேனுத்தின		மாலையள்ளி
நின்மவா	என்றும்வா	இன்றுமேவா (நித்)

தித்திக்கும் முனதுபெருஞ்
சத்திக்கே யடிமைதிரு
மூர்த்திக்கும் கீர்த்திக்கும் மூர்த்திக்குருவே (நித்)

திருப்புகழ் சந்தம்.

தன தானன தானன தானன
தன தானன தானன தானன
தன தானன தானன தானன தனதானா

பரி பூரண மான சொரூபனே
ஹரி யாயய ஞான ரூபனே
சிறியே னிட ராமலே பாடவு யெனையாள்வாய்

குக னேயடி யேனெனை யாதரி
மிக வேயுன தாளடி நான்துதி
செய வேமன தோர்மை யுமாயுற அருள்தாராய்

ஒரு நாள்குரு மாமுனி யாருட
மரு லோடிட வேயருள் நாடிட
அரு ளாகிய ஞானப் தேமிக உபதேசம்

மிக வேதெரி வாயென வேசெய்த
கும ராவரு மாமுக வேலவ
செவி னோயது தீரவு மாமருந் ததுதாராய்

உரு வாயுல கோரினை வோர்தொழும்
குரு வேளனை யாழ்வது நீயினி
வரு வாய்பழ நீதிரு வாவினன் குடியோனே

திரு கார்த்திக கேயனே நானுன
துரு வேமன தால்துதி பாடின
திரு மூர்த்தியை ஆதரி ஆதரி முருகோனே

பல சந்தம்.

வருத்த முற்று தேடிய திரவிய
மிகுத்த லுற்று கூடிய வரையெத
ருமத்தை யிட்டு நீடிய குலமுறை வழுவாத

குலத் துதித்த காளைப வருமிக
இடுக் கணுற்ற நாளையு முணவுடை
உடுக்க விற்ற காலையு முனதடி மறவாசாய்

கிடைத்த மட்டி லோர்பகு திதருமை
மிகுத்து சத்ய நீதிநெறி முறையை
கடைப் பிடித்து ஆறுமு கவன்துணை எனவாழ்வா

படித்த மட்டும் நீதிய நெறிமுறையை
இடித் தலட்டி பாதக செயலதை
பிடித்த மட்டி காசுவரு கபல அனியாயம்

வெறுக்க மிக்க வேகுறை யவமதி
தொடுத்து தன்னை யேதன பதிஎனை
கெடுக்க உற்ற தாரென நவிலுவர் மதிகேடர்

இடுக்க ணுற்ற காலையி லுனதடி
விருப்ப முற்று நாடவு மெனையுன
திருகக் ணுற்று ஆதரி யெனமிக தொழுவேனே

தினைப் புனத்து வேடுவ வடிவுட
னடுத்த வள்ளி மோகவ லீபரவ
விடுத்த ணைத்த பால பரமகுரு சிவரூபா

அடுத்த டுத்து காவடி வருகிற
சிறப்பைக் கண்டு சேவடி தொழுதுநின்
பதத்தைக் கண்டு பாடினே னடிமையுன் திருமூர்த்தி

கருத்தை யுற்று நாடுவே னுனைமிக
திருத்த முற்றுப் பாடுவே னுனைநிதம்
வருத்தஞ் சற்று மேயிலை எனவருள் குமரேசா

181095